பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 4 வெள்ளிக்கிழமை (20 08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 265

## தமிழீழ நீதித்துறையின்

# நீதியாளர்களும் சட்டவாளர்களும் நேற்று தலைவர் பிரபா முன் சத்தியப்பிரமாணம்

## புதிய அத்தியாயம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 20

தமிழீழத்தில் நீதி நிர்வாகத்தை அமுல்செய்யும் பொருட்டு நிறுவப்படவுள்ள நீதிமன்றங்களில் பணிபுரியவுள்ள நீதியாளர்கள், சட்டவாளர்கள் நேற்று தமிழீழ தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர்.

தமிழீழத்தில் இடம்பெறும் இந்த வரலாற்று நிகழ்ச்சி புதிய அத்தியாயமாக அமைந்துள்ளது. இந்நிகழ்வில் தலைவர் பிரபாகரன் நேற்று சிறப்புரையாற்றினார்.

நேற்றைய சத்தியப்பிர மாண நிகழ்ச்சியில் தமிழீழ சட்டக் கல்லூரியில் பயிற் சியை முடித்துக் கொண்ட நீதியாளர்கள், சட்டவாளர் கள் பங்கேற்றனர்.

தமிழீழத்தில் நிறுவப்பட வுள்ள நீதிமன்றங்கள் முழுக்க முழுக்க தமிழீழ சட்டதிட்டங் களுக்கு அமையவே இயங்க வுள்ளன என்பதும்—

இதற்காக தமிழீழ நீதிச் சட்ட நூல் ஒன்று தயார் செய் யப்பட்டுள்ளது என்பதும் தெரிந்தவையே.

சத்தியப்பிரமாண நிகழ்ச்சி யில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன், அரசியல் ஆலோச கர் அன்ரன் பாலசிங்கம், நீதி

(6 ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் முன்னிலையில் நீதிவானர் ஒருவர் சத்தியப்பிரமாணம் எடுத்து நியமனப்பத்திரத்தை பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படம். நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பராவும் படத்தில் காணப்படுகிறார்.

## பொறி வெடியில் சிக்கிய பொலீஸ் காலை இழந்தார்

### மோதலில் சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், ஆக. 20

வாழைச்சேனை கல்குடா வீதியில் உள்ள பேய்த்தாளை என்னுமிடத்தில் கடந்த வெள்ளியன்று பொறி வெடியில் சிக்கிய பொலீஸ்காரர் தமது கால் ஒன்றை இழந்தார்.

வீதி ரோந்தில் ஈடுபட்டிருந்த சமயம் பிரஸ்தாப பொலீஸ் காரர் பொறிவெடியில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழ நீதித்துறைக்கு அத்திவாரமிடும் முக்கிய வரலாற்று நிகழ்வு

### சத்தியப் பிரமாண வைபவத்தில் தலைவர் உரை

யாழ்ப்பாணம், ஆக. 20

இன்றைய தினம் எமது இயக்கத்தின் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கியமான தினம் ஆகும். தமிழீழ நீதித் துறைக்கு அத்திவாரமிடப் பட்ட ஒரு முக்கிய வரலாற்று நிகழ்வாக இந்த சத்தியப் பிர மாண வைபவம் நடைபெறு கிறது.

தமிழீழ நீதித்துறையின் நீதியாளர், சட்டவாளர் ஆகி யோரின் சத்தியப் பிரமாண வைபவத்தில் உரை நிகழ்த்து கையில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் மேற்கண்டவாறு கூறி னார்.

வைபவத்தில் கலந்து கொண்டு தமிழீழத் தேசியத் தலைவர் பேசுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

முன்பு பஞ்சாயத்து முறை யில் கிராமிய இணக்க சபை களை நிறுவி மக்களின் பிணக் குகளைத் தீர்த்து வைக்க எமது இயக்கம் முயன்றது. இன்று நீதித்துறையில் பயிற்சி பெற்ற போராளிகள் நீதியா ளர்களாகவும் சட்டவாளர்க ளாகவும் உருவாக்கப்பட்டு, செம்மையான முறையில் நீதி நிர்வாகத்துறை கட்டி எழுப் பப்படுகிறது.

ஒரு சுதந்திரம் பெற்ற,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## லலித் அத்துலத் முதலி கொலை:

## ஸ்கொட் அறிக்கைக்கு ஆட்சேப நடவடிக்கை

கொழும்பு, ஆக. 20

லலித் அத்துலத் முதலியின் கொலை குறித்து விசாரணை நடத்திய ஸ்கொட்லண்ட்யார்ட் இரகசியப் பொலீஸின் அறிக் கையை, ஆட்சேபிக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட லலித் குடும்பத்தினரின் சட்டவல்லுநர்கள் நடவடிக்கை எடுத்து வரு கின்றனர்.

இவ்வார இறுதியில் வெளியிடப்படவிருக்கும் இந்த ஆட்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## புதுக் குடியிருப்பு:

### குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஆக. 20

முள்ளைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்றுக் காலை 5-45 மணி யளவில் இரு பொம்மர்கள் குண்டுகளை வீசித்தாக்கின.

அப் பகுதியில் எட்டு குண்டு கள் வீசப்பட்டன. சேதங்கள் குறித்து விவரமான தகவல் ஏதும் நேற்றிரவு வரை இடை[illegible]

## பூநகரிப் பாதை விவகாரம்:

## ஜனாதிபதியுடன் சந்திப்பு; பேச்சில் முன்னேற்றம்?

பூநகரிப் பாதை விவகாரம் தொடர்பாக அகதிகளுக்கான ஐ. நா. அதிகாரிகள், ஜனா திபதி டி. பி. விஜேதுங்கவு டன் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சுக்கள் நடத்தியதாக அறியவந்தது.

இந்தப் பேச்சுக்களில் முன் னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரி வித்தன.

இந்தப் பேச்சுக்களைத் தொடர்ந்து ஐ. நா. அதிகாரி கள் பூநகரி முகாமுக்கு விஜ யம் செய்து, பூநகரி வீதி களை படம் பிடித்துச் சென் றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது. (ஓ-3)

## பேச்சுக்கான சூழ்நிலையை அரசே உருவாக்க வேண்டும்

### பி. பி. லிக்கு அரச அதிபர் பேட்டி

கொழும்பு, ஆக. 20

இனப்பிரச்சினை தீர்க்கப் பட்டு, சமாதானம் உருவாக் கப்பட வேண்டுமானால் விடு தலைப் புலிகளுக்கும் அரசுக் கும் இடையில் நேரடிப் பேச்சு வார்த்தை நடைபெற வேண் டும் பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலையை அரசாங்கமே தோற்றுவிக்க வேண்டும்.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. கா மாணிக்க வாசகர் பி. பி. சி. சிங்கள சேவைக்கு நேற்று அளித்த செவ்வி ஒன்றில் இப்படித் தெரிவித்தார்.

அரச அதிபர் தமது செவ் வியில் மேலும் தெரிவித்த தாவது:-

கடந்த வாரம் நான் விடு தலைப் புலிகள் பிரமுகர்களு டன் பேசினேன். அரசியல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு
ஸ்ரீ மகா கணபதிப்பிள்ளையார் கோயில்
(காளி கோயில்)

## வருடாந்த மஹோற்சவம் - 1993

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் 22-08-1993 ஞாயிற்றுக்கிழமை காலை 10-45 மணிக்கு கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி 31-08-1993 செவ்வாய்க்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறும்.

**விஷேட உற்சவங்கள்**

கொடியேற்றம் 22 – 08 – 93 ஞாயிறு காலை 10-45 மணி
சப்பறத்திருவிழா 29 – 08 – 93 ஞாயிறு இரவு 7-00 மணி
தேர்த்திருவிழா 30 – 08 – 93 திங்கள் காலை 9-05 மணி
தீர்த்த உற்சவம் 31 – 08 – 93 செவ்வாய் காலை 9-30 மணி
பூங்காவனம் 01 – 09 – 93 புதன மாலை

தினந்தோறும் இரவு 8மணி முதல் 9மணி வரை
சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம் B. A. Dip-in Ed
(விரிவுரையாளர், பலாலி ஆசிரியர் கலாசாலை)
அவர்களால்

**தெய்வீக சொற்பொழிவுகள்**
நிகழ்த்தப்படும்

22–08–93 ஞாயிறு — அபிராமி கடைக்கண்களே
23–08–93 திங்கள் — விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
24–08–93 செவ் — கெடுவீரம் மன்னே
25–08–93 புதன் — பல்லோரும் ஏத்தப் பணிந்து
26–08–93 வியா. — மணி வார்த்தை
27–08–93 வெள்ளி — நானோ இதற்கு நாயகமே
28–08–93 சனி — அன்பே சிவம்
29–08–93 ஞாயிறு — மரத்தை மறைத்தது மாமத யானை
30–08–93 திங்கள் — தவயோகியும் குறள் வேந்தனும்
31–08–93 செவ். — ஆலயமும் வழிபாடும்

அடியார்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— ஆலய பரிபாலனசபை

அன்பளிப்பு:
நிரு ரியூசன் சென்ரர்,
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்
(சி-5671)

## இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில்

மேடையேறுகிறது
தமிழீழ விடுதலைப் புலிகள்
கலைபண்பாட்டுக் கழக ஆதரவில்

**"களத்தில் காத்தான்"**

எழுச்சிப் பாடகன் S. G. சாந்தனின் மைந்தன் பிரபுராஜ் பாலகாத்தானாக காளிகோயிலடி இளைஞர்களுடன் இணைந்து வழங்கும்

**"காத்தவராயன்"**

காலம்:-
23-08-93 (திங்கள்) மாலை 6 மணி

**பிரவேசம்:- 10/-, 20/-**

பிரசுர அன்பளிப்பு:-
ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்
திருநெல்வேலிச் சந்தி
(27006)

**93 A/L AUG**
**APPLIED II**

பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான இலவசக் கலந்துரையாடல் வகுப்பு

ஆசிரியர்:
திரு. வெக்டர்

21 – 08 – 1993
Sat. 8-00 a.m.

**NEW SCIENCE HALL**
Kannathiddy,
Jaffna.
(சி-5880)

# கிழக்கிலும் வவுனியாவிலும் உள்ளூராட்சித் தேர்தல்கள்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, ஆக. 20

கிழக்கு மாகாணத்தில் உள்ள மாநகரசபை, நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கும் —

வன்னி மாவட்டத்தில் வவுனியா நகரசபைக்கும் — தேர்தல்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று இத்தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு மாநகரசபை, அம்பாறை நகரசபை, திருகோணமலை நகரசபை, வவுனியா நகரசபை, மற்றும் கிழக்கு மாகாணத்தில் உள்ள 36 பிரதேசசபைகள் ஆகியவற்றுக்கான தேர்தல்களில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து வேட்பு மனுக்கள் அடுத்த மாதம் 3 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை அந்தந்த தேர்தல் அத்தாட்சிப் படுத்தப்பட்ட அதிகாரிகளினால் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார்.

இத் தேர்தல்களில் போட்டியிட விரும்பும் சுயேச்சை குழுக்கள் தங்களின் கட்டுப் பணத்தை 9.9.1993 நண்பகல் 12மணிக்கு முன் செலுத்த வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 11 பிரதேசசபைகளுக்கும் —

அம்பாறை மாவட்டத்தில் 15 பிரதேச சபைகளுக்கும் —

திருகோணமலை மாவட்டத்தில் 10 பிரதேச சபைகளுக்கும் தேர்தல்கள் நடைபெற உள்ளன.

இதற்கிடையில்—

வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட தினத்தில் இருந்து 5 முதல் 8 வாரங்களுக்கு இடையில் தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

(இ-எ)

## வைத்தியசேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? உடல் மெலிவா? உடல் பருமனா? தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் ரோகங்களா? மாதவிடாய்க் கோளாறுகளா? உரிய ஆலோசனையும், சிறந்த சிகிச்சையும் கிடைக்கும்.

காலை 8. 30 முதல் 12. 30 வரை. } தினமும்
பிற்பகல் 3. 00 முதல் 6. 00 வரை }

டாக்டர் த. சிவானந்தன்
D. A. M., R. A. M. p.

"சிவா வைத்தியசாலை"
384, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு.
(27007)

## மந்திகை வைத்தியசாலையின் அம்புலன்ஸ் பழுதடைந்தது; நோயாளர்கள் அவதி!

வடமராட்சி, ஆக. 20

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளதால் அவசர நோயாளி ஒருவர் காரில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உறவினர்களால் கொண்டு செல்லப்பட்டார்.

இவ்வைத்தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் பற்றரி பழுதடைந்துள்ளதால் இயங்கமுடியாத நிலையில் உள்ளது.

இதனையடுத்து வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸில் அவசர நோயாளிகள் யாழ் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு வந்தனர்.

சில தினங்களுக்கு முன்னர் படுகாயமடைந்த ஒருவரை யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலை அம்புலன்ஸைப் பயன்படுத்தமுடியாத நிலை ஏற்பட்டதையடுத்து வாடகைக் காரில் படுகாயமுற்றவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். (த-173)

## திரிபோஷா மா வந்தது

தென்மராட்சி, ஆக. 20

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு 'திரிபோஷா' மா வந்துள்ளது. (த 117)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

தேசிய பயிலுநர் சபையுடன் இணைந்த

## குடும்ப நல சுகாதார உதவியாளர் பயிற்சித் திட்டம்-1993

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் சுகாதாரப் பகுதியில் குடும்ப நல சுகாதார உதவியாளர் பயிற்சி திட்டம் ஒன்றை தேசிய பயிலுநர் சபையுடன் இணைந்து ஆரம்பிக்கவுள்ளது. இப்பயிற்சி நெறியை பெற விரும்பும் கீழ்க்காணும் தகைமையுடையோர் தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் தமது தகைமைகளை நிரூபிக்கும் மூலச் சான்றிதழ்களுடனும் 21-08-93ஆம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். கண்டி வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்திற்கு சமூகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. க. பொ த. (சா: த) தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. 17 வயதிற்கும் 25 வயதிற்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
3. மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
4. ஏற்கனவே சுகாதாரத் தொண்டர்களாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பயிற்சி ஒரு வருட காலத்திற்கு வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 450/- மட்டும் படியாக வழங்கப்படும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
திகதி: [illegible]
(சி-5809)

## வேலை வாய்ப்பு

யாழ்குடா நாட்டில் இயங்கும் தொழிற்சாலைக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு வெற்றிடம் உண்டு.

விண்ணப்பிக்க வேண்டிய கடைசித் திகதி:
28 - 08 - 1993

1. கடைச்சல் (Lathe man)
2. தகடுவேலை (Tinker)
3. பெயின்றர் (Spray & Hand Painter)
4. டீசல் மெக்கானிக் (Diesel Mechanics)
5. மோட்டார் சைக்கிள் மெக்கானிக் (Motor Cycle Mechanics)
6. டை வேலை (Tool Room Work)
7. களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper) (தொழிற்சாலை அனுபவம் வேண்டும்) (Factory Experience)
8. லிகிதர் (Cost Clerk) (தொழிற்சாலை அனுபவம் வேண்டும்) (Factory Experience)

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

முகாமையாளர்,
இரும்பகம்
ஸ்ரான்லி வீதி, [அருச்சுனா வீதி]
யாழ்ப்பாணம்.
(6436)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்தில்

# தொழில் பயிற்சி திட்டத்தை நிறுத்த 'கெயர்' முடிவு!

யாழ்ப்பாணம், ஆக. 20

கெயர் இன்ரநஷனல் நிறுவனத்தால் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த தொழிற் பயிற்சி திட்டங்கள் நிறுத்தப்படவிருக்கின்றன

யாழ். மாவட்டத்தில் பல் துறை சார்ந்தவர்களுக்கு பல லட்சம் ரூபா செலவில் கெயர் இன்ரநஷனல் நிறுவனம் தொழில் பயிற்சி அளிக்கும் திட்டத்தை கடந்த பல வருடங்களாக செயற்படுத்தி வந்தது.

இத்திட்டங்களை இங்கு நிறுத்தி, வவுனியாவில் அவற்றைச் செயல்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும்—

இந்த திட்டத்துக்கு பொறுப்பான அதிகாரி இடரென வவுனியாவுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும். தெரிய வந்துள்ளது.

இதேவேளை—

தற்சமயம் யாழ்ப்பாணம் வந்துள்ள இந்த அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி செல்வி மொன் காத்தர், பிரதேச பிரதிநிதி செல்வி ஷெறி ஆகியோரிடம் இந்த திட்டத்தை நிறுத்தும் யோசனையைக் கைவிடுமாறு கோரப்படவிருக்கிறது. (உ-3)

## இனப்பிரச்சினை குறித்து அமெரிக்க அமைச்சர் கருத்து

வாஷிங்டன், ஆக. 20

இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படாமலே இருந்து வருகின்றது.

அமெரிக்காவின் புதிய உதவி வெளியுறவு அமைச்சர் செல்வி ரொபின் ரபேல் அண்மையில் பதவி ஏற்றபோது நிகழ்த்திய உரையில் முன் கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டார். இதன் மத்தியிலும் இலங்கையில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் கூறினார்.

கடந்த 30 ஆண்டுகளில் இல்லாதவாறு தென்னாசியப் பிராந்தியத்துடனான அமெரிக்காவின் உறவு உறுதியாக உள்ளது என்றும் அவர் சொன்னார். இலங்கையில் பொருளாதாரச் சீர்திருத்தக் கொள்கை தொடர்ந்து அமுல் செய்யப்படுவது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

அமெரிக்க வெளியுறவு அமைச்சில் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் தென்னாசியப் பணியகத்துக்கு செல்வி ரபேல் பொறுப்பாக இருப்பார். (த-எ)

## பயிற்சிக்கு தெரிவு

யாழ்ப்பாணம், ஆக. 20

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பகுதியைச் சேர்ந்த நான்கு சுகாதார தரிசிப்பாளர்கள், சுகாதார பரிசோதகர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டு களுத்துறைக்கு சென்றுள்ளார்கள். இவர்கள் அங்கு 18 மாதங்கள் பயிற்சியினை மேற்கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (த-162)

## மாகாண சபை ஊழியருக்கு விரைவில் ஓய்வூதியம்

கொழும்பு, ஆக 20

மாகாண அரசாங்க சேவையில் கடமையாற்றும் சகல ஊழியர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இசுறுபாயாவில் அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்ட மாநாட்டில் பேசும்போது பொது நிர்வாக மாகாண சபைகள் உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இத் திட்டம் துரிதமாக அமுல் செய்யப்படும் என்றும் அமைச்சர் சொன்னார்.

மாகாணசபை ஆளுநர்கள், முதலமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் இம் மாநாட்டில் கலந்து கொண்டனர். நிர்வாக நடைமுறையில் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் மாநாட்டில் ஆராயப்பட்டது. (த-162)

## ஆலயங்களில்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை ஆவணிமாத சதுர்த்தி திருவிழா நடைபெறும். மாலையில் விநாயகப் பெருமான் வீதி உலா வருவார்.

o o o

அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தேர்த்திருவிழா 30 ஆம் திகதியும், தீர்த்தத் திருவிழா 31 ஆம் திகதியும் நடைபெறும் (க-17)

o o o

யாழ். மணிக்கூட்டு வீதியிலுள்ள அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவங்கள் நாளை சனிக்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு நடைபெறும்.

o o o

சாவகச்சேரி - நுணாவில் மேற்கு மணங்குணாய் வீரகத்தி விநாயகர் ஆலய மலர் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய நிர்வாக சபைத் தலைவர் திரு. கந்தையா சிவம் சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

ஆலய நிர்வாகசபையின் உப தலைவர் திரு ஆறுமுகம் செல்லையா மலரை எழுதியுள்ளார். (க)

## யாருடையது?

யாழ். நகர எல்லைக்குள் தாம் கண்டெடுத்த மகளிர் கைக்கடிகாரம் ஒன்றை, நல்லூரைச் சேர்ந்த எஸ். சுதர்சமோகன், என். திருநேசன் ஆகிய மாணவர்கள் உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளனர்.

கைக்கடிகாரத்தின் உரிமையாளர்கள் தகுந்த அத்தாட்சிகளைக் காட்டி அதனை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம். (அ)


உ

சாவகச்சேரி • சங்கத்தானை • இத்தியடி

அருள்மிகு

வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

மஹா கணபதி ஹோமம்

நாட்டு மக்களின் சுபீட்சம் அமைதி வேண்டி,

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக ஆண்டு ஆவணித் திங்கள் 5ஆம் நாள்

(21-08-1993) சனிக்கிழமை

நடைபெறும்.

மஹா கணபதி ஹோம வைபவம்,
தேவஸ்தான பிரதம சிவாசாரியார்
மட்டுவில் - "கிரியாகான கலாமணி"
சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள்
அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெறும்.

தேவஸ்தானக்குருக்கள்: "ஆசார்ய திலகம்"
சிவஸ்ரீ பொன். பஞ்சாட்சரக்குருக்கள்

மேற்படி யாக உபயகாரர்களும்,
பரிபாலன சபையும்.

சாவகச்சேரி.

(26992)



அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

ஜனசக்தி இலவச பாலர் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக ஜனசக்தி சனசமூக நிலையத்தினால் 18-8-93 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்ற எண்களின் விவரம்:

| 1ஆம் பரிசு: | 2ஆம் பரிசு: | 3ஆம் பரிசு: |
|---|---|---|
| 2329 | 3451 | 4843 |

ஆறுதற் பரிசுகள்:

| | | | | |
|---|---|---|---|---|
| 2596 | 4343 | 4720 | 5387 | 3157 |
| 3471 | 6672 | 1155 | 5655 | 6382 |

— ஆதரவுக்கு நன்றி —

(27000) — நிர்வாகம்.



பாசமகளின் 10ஆவது ஆண்டு



விஸ்வரம்யா

மண்ணுலகில்:
3 — 3 — 1979
விண்ணுலகில்:
20 — 8 — 1983

பத்தாண்டு காலம்
பறந்தோடி விட்டதம்மா
முத்தான முழு நிலவாய்
ரம்யா நீர் வாழ்ந்தீரே
அப்பாவும் அம்மாவும்
அண்ணாவும் பரிதவிக்க
எமக்கம்மா-
சென்றடைந்தீர்
எமைத்தேற்ற-
யாருமில்லை.

உமது பிரிவால் வாடும்:
அன்பு
விஸ்வநாதசர்மா
ஜானகி
வித்யாஷங்கர்.

நல்லூர்,
யாழ்ப்பாணம். (6430)



அறிவித்தல்

ஆவரங்கால் சிவன் தேவஸ்தான
திருப்பணி விசேட பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய புதிய சித்திரத்தேர்த் திருப்பணி சம்பந்தமான விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 22-08-1993 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். சிவநேயச் செல்வர்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆக்கமும், ஊக்கமும் தந்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.

சிவன் தேவஸ்தானம்,
ஆவரங்கால்.

(27001)



வடலியடைப்பு புதறானை
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய
வருடாந்த மஹோற்சவம்

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | 20 - 8 - 93 வெள்ளிக்கிழமை | காலை 10 மணி. |
| சப்பறம் | 29 - 8 - 93 ஞாயிற்றுக்கிழமை | பிற்பகல் 4 மணி. |
| தேர்த்திருவிழா | 30 - 8 - 93 திங்கட்கிழமை | காலை 8 மணி. |
| தீர்த்தம் | 31 - 8 - 93 செவ்வாய்க்கிழமை | காலை 8 மணி. |
| பூங்காவனம் | 1 - 9 - 93 புதன்கிழமை | |

அன்பளிப்பு:
அரசடி சனசமூக நிலையம்,
வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

(6434)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புதிய முதிரை, பாலை நிலைகள், யன்னல்கள், பாலை தீராந்திகள், முதிரை பலகைகள் நியாயமான விலைக்கு விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி), திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (26984)

நக்கா வீதி, 6ஆம் இலக்கத்திலுள்ள இரண்டு பரப்பு இரண்டு குழி காணி விற்பனைக்குண்டு. ஆ. திரேசம்மா, இல. 143/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தொடர்புகொள்ளவும். (26998)

### சியாக்காய் பவுடர்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் கூந்தல் வளர்ச்சி, கண் குளிர்மைக்கு மிகவும் திறமையானது சியாக்காய்ப்பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சியாக்காய்ப்பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (26778)

### ஆண்டு 4 பரீட்சை

ஒவ்வொரு சனிக்கிழமையும் புலமைப்பரிசில் (1994) மாணவருக்கு நடத்தப்படும் பரீட்சைத் தொடரின் 6ஆவது பரீட்சை 21 - 8 - 93 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும். வினாத்தாள் பெற்றுக்கொள்ளலாம். எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26999)

### இலவச திருமண சேவை

32 வயது, கார்த்திகை, ஆஸ்திரேலியாவில் Computer படிக்கும் மணப்பெண்ணுக்கு மணமகன் ஆஸ்திரேலியா/இலங்கையில் தேவை. மணமகனை ஆஸ்திரேலியா அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். விமலா, இலவச திருமண சேவை, நாச்சிமார் கோயிலடி. (26960)

### இறைச்சிக் கோழிகள்

இறைச்சிக்கோழிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சுத்தம்செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (26996)

### போட்டோ பிரதிகள்

உங்களுக்குத் தேவையான போட்டோஸ்ரற் பிரதிகள் இப்போது எங்களால் செய்து கொடுக்கப்படுகின்றன. சித்திராலயா, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-5669)

### இலவச வகுப்புகள்

தென்மராட்சி, ஆக. 20

இயக்கச்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்துள்ள க. பொ. த. சாதாரணதர வகுப்புகளில் (ஆண்டு II) கல்வி பயிலும் மாணவர்களுக்கு பளைப்பகுதியிலுள்ள முன்னணி ஆசிரியர்களால் பாடசாலை விடுமுறையில் விசேட வகுப்புகள் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன. (க-117)

---

# SCIENCE ACADAMY

நெல்லியடி

## 94 A/L

(மீட்டல் வினா விடை வகுப்புகள்)

விலங்கியல்

## Mr. சுபசீலன்


ஆரம்பம்: 21 - 08 - 1993

(22 - 08 - 93 இல் பின்னர் அனுமதிகள் நிறுத்தப்படும்.)

(சி/5598)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



| ஆண்டவன் படைப்பு: | அந்நியன் அழிப்பு: |
|---|---|
| 13 — 08 — 1946 | 20 — 08 — 1992 |

## கதிரவேலு கணேஸ்வரன்

(அளவெட்டி வடக்கு)

(மின்சாரசபை ஊழியர், வட்டுக்கோட்டை)

உங்கள் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, தாய், சகோதரர்.

50, பலாலி வீதி,
சந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (26973)

---

## மலர்ந்ததோ மூன்றாண்டு!



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 27 — 07 — 1934 | 20 — 08 — 1990 |

## மனவல் டோமினிக் (வாஸ்)

ஐயா! தெய்வமே!
தினந்தோறும் நாம் அழுது
திணறுகின்றோம் - திடீர் மறைவால்
திடமுடனே நாம் இருக்க
திட்டங்கள் தீட்டினீரே
தினப் பொழுதில் மூன்றாண்டு கழிந்தாலும்
திங்களின் மதி ஒளியாய்
திடமுடனே எம் மனதில் இருப்பீரே ஐயா!

உங்கள் ஆத்மா இறைவனில் அமைதி அடைவதாக!!

பிரிவால் துயருறும்:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

41, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம். (26993)

---

உ

கொக்குவில் கிழக்கு

பொற்பதி விநாயகர் ஆலய

# அலங்கார உற்சவம்

21 — 08 — 1993 —— 31 — 08 — 1993

தினமும் மாலை 6-30 — 7-30 மணி வரை

சிவத்தமிழ் வித்தகர் திரு. சிவமகாலிங்கம்
(B. A; Dip - in - Edu; விரிவுரையாளர் - பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை)
அவர்களால்

## தெய்வீக சொற்பொழிவு நிகழ்த்தப்படும்

20 — 08 — 1993 வெள்ளி " சிவசக்தி வழிபாட்டின் சிறப்பு "
21 — 08 — 1993 சனி " கணபதி கடாட்சம் "
22 — 08 — 1993 ஞாயிறு " உதித்தனன் உலகம் உய்ய "
23 — 08 — 1993 திங்கள் " குருவாய் வருவாய் "
24 — 08 — 1993 செவ்வாய் " அல்லல் பிறவி அறுப்பானே "
25 — 08 — 1993 புதன் " துணையில் பிணை நெஞ்சே "
26 — 08 — 1993 வியாழன் " சித்தம் அழகியார் "
27 — 08 — 1993 வெள்ளி " தெளிவு குருவின் திருமேனி காண்டல் "
28 — 08 — 1993 சனி " உள்ளம் பெரும் கோயில் "
29 — 08 — 1993 ஞாயிறு " கெளரி தானே "
30 — 08 — 1993 திங்கள் " குறளும் மந்திரமும் "

தி. இராஜசேகரக் குருக்கள்,
ஆலய குருக்களும், உரிமையாளரும்,

விளம்பர அன்பளிப்பு:

ஸ்ரீ அம்பாள் மலசரக்கு மாளிகை,
பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி.

(6432)

---

# கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்

மருதனார் மடம் - சுன்னாகம்

ஆச்சிரமத்தின் 54 ஆம் ஆண்டு விழா இம்மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். நண்பர்கள் யாவரும் அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| காலை | 7-00 மணி | பரிசுத்த நற்கருணை ஆராதனை |
| காலை | 9-00 மணி | திருமுழுக்கும், நன்றி செலுத்தும் ஆராதனையும் |
| காலை | 10-00 மணி | கலந்துரையாடல் |
| நண்பகல் | 12-00 மணி | மன்றாட்டு செபம் |
| மாலை | 3-30 மணி | பகிரங்கக் கூட்டம் |

உங்கள் நண்பர்களை அழைத்து வாருங்கள்.

வண. சேவக் சாமுவேல் தேவரட்னம் அல்பிரட்,
(சாம் அண்ணன்)

கிறிஸ்தவ சேவ ஆச்சிரமம்,
மருதனார் மடம், சுன்னாகம்.

(26939)

---

# வங்கியாளர் பரீட்சை

(இடை நிலைத்தேர்வு)

## 1993 நவம்பர்

கணக்கியல் மீட்டல் விரிவுரைகள்

ஆரம்பம்: 22 - 08 - 1993
ஞாயிறு 12 மணி

விரிவுரையாளர்:

## திரு. V. உருத்திரசிங்கம்

குறிப்பு! கடந்த கால வினாத்தாள்களும் மீட்டல் செய்யப்படும்.

விபரங்களுக்கு:

பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை
57/48, ஸ்ரான்லி வீதி,
(இலங்கை வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(சி-5594)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கூரான ஆயுதம்; எச்சரிக்கை தேவை

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இடைக்கால நிர்வாகம் ஒன்றை ஏற்படுத்தும் புதிய யோசனையை நாடாளுமன்ற சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது முன் வைத்திருக்கிறார் இந்த யோசனையை தெற்கில் இயங்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு சபாநாயகரே அனுப்பி வைத்திருந்த போதிலும், இது அரசாங்கத்தின் திட்டம் என்பதில் சந்தேகமில்லை.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணமுடியாத நிலையில்— தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றத்தக்க நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு விரும்பாத நிலையில்— மீண்டும் அதிகாரம் இல்லாத முருக்கம் செத்தல் மாகாண சபைக்கு புத்துயிர் கொடுக்க அரசு முனைகிறது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக 1987இல் மாகாண சபைத் திட்டம் முன் வைக்கப்பட்ட போது, தமிழர்கள் அதனை நிராகரித்தார்கள். தமிழ்ப் பகுதிகளின் அபிவிருத்திக்கும் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றத்துக்கும் உதவவல்ல முழுமையான அதிகாரம் கவ மாகாணசபைக்கு வழங்கப்படவில்லை. அதிகாரப்பரவலி என்ற மினுக்கமான வார்த்தைச் சோடனை செய்யப்பட்டதே அன்றி சுயாதிகாரத்துக்கும் போதிய வசதி எதுவும் செய்யப்படவில்லை. சட்டம் இயற்றும் அதிகாரம் பெயருக்கு வழங்கப்பட்டாலும், மாகாணசபை இயற்றும் சட்டங்களை கீழே தள்ளி செயல் இழக்கச் செய்யும் விதத்தில் புதிய சட்டங்களை நாடாளுமன்றம் இயற்ற வகை செய்யப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி அதிகாரங்களைப் பொறுத்த வரையில் நாணயக் கயிறு கொழும்பு அரசின் கையிலேயே உள்ளது.

அத்தகைய மாகாண சபைக்கு ஓர் இடைக்கால நிர்வாகத்தை உண்டாக்கி இயங்கச் செய்வதால் தமிழர்களுக்கு என்ன நன்மை அல்லது பயன் கிடைக்கப்போகிறது?

போரை நிறுத்தாமல், அமைதியை உருவாக்காமல் நிர்வாகத்தை நியமித்து ஆகப்போவது என்ன? வேண்டுமானால் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நிர்வாகத்தை உருவாக்கி நடத்தலாம். ஆனால் வடக்கு - கிழக்கின் பெரும்பகுதி விடுதலைப் புலிகளின் வசம் இருக்கும் போது கொழும்பில் உள்ள கட்சிகளைக் கொண்ட நிர்வாகம் அப்பகுதிகளில் இயங்குவது எப்படிச் சாத்தியம்?

நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலமும் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியவில்லை என்ற நிலைமை தோன்றியிருக்கிறது. அதில் பங்கு கொண்ட தமிழ்க் கட்சிகள் விலகிப் போய்த் தூர நிற்கின்றன. அவற்றை தனது பக்கம் கவர்ந்திழுப்பதன் மூலம் வடக்கு - கிழக்கு இணைப்பில் எழுந்துள்ள முரண்பாட்டைக் கீழே அமுக்கி விடவும், தமிழர்கள் கையில் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று வெளியே உலகத்துக்குக் காட்டிக் கொள்ளவுமே இந்த ஒரு கல்லில் இரு மாங்காய் வீழ்த்தும் கெட்டித்தனமான தந்திரம்!

அது மட்டுமன்றி தமிழ்ப் பகுதிகளில் தமிழர் நிர்வாகம் நடக்கிறது என்ற போர்வையின் கீழ் யுத்தத்தைத் தீவிரப்படுத்தவும் இந்த இடைக்கால நிர்வாக சபையை அரசு பயன்படுத்தும். தமிழர்கள் தமக்குள்ளேயே மோதிக்கொள்ள தூண்டிவிட்டு தான் எண்ணியதைச் சாதிக்கும் சந்தர்ப்பம் ஆக்கிக்கொள்ளும். உண்மையில் இடைக்கால நிர்வாகம் தமிழர்களின் உரிமைப்போரை மழுங்கடிப்பதற்காக ஏவப்படும் கூரான ஆயுதம். மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

பாஷையூர் [சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் சென். அன்ரனீஸ் கோயத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றது. இன்றைய ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- பாடும் மீன் ''பி'' அணி எதிர் கலைவாணி அணி.

★ 5.00 மணி:- யங்ஹென்றியன்ஸ் அணி எதிர் ஈச்சமோட்டை அணி.

o o o

காந்திஸ்ரார் விளையாட்டுக் கழகம், அல்வாய் சிங்க மாப்பாணர் விளையாட்டு அரங்கில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

அந்த ஆட்டங்களில் மோதவுள்ள கழக அணிகள் வருமாறு:-

★ இன்று மாலை — மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி எதிர் புத்தூர் வளர்மதி அணி.

★ நாளை மாலை — அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி எதிர் வேந்தா ஐக்கிய வி. க. அணி.

# சித்த மருத்துவத்துறை வளர தனிப்பீடம் அமைய வேண்டும்

### சித்த மருத்துவ மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக 20

''தென் இலங்கையில் ஆயுள்வேத வைத்தியமுறை வளர்ச்சிபெறக் காரணம். சுதேச மருத்துவபீடம் ஒன்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வருவதே. அதே போன்று யாழ் பல்கலைக்கழகத்தின் கீழ் சித்த மருத்துவத் துறை வளர தனிப் பீடம் அமைக்க வேண்டும்.''

இப்படியான கோரிக்கையை விடுத்துள்ளது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர் மன்றம்.

இந்தக் கோரிக்கையை முன் வைத்துதடியில் உள்ள சித்த மருத்துவத்துறையில் மேற்கொள்ளப்படும் சத்தியாக்கிரக போராட்டம் குறித்து சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சித்த மருத்துவம் பண்டைய காலம் போல் ஒரு குறிப்பிட்ட பரம்பரைக்கு உரித்தான ஒன்றாக இராது படிப்படியாக கல்லூரி மட்டத்தில் போதிக்கப்பட்டு இன்று பல்கலைக்கழக மட்டத்தில் கற்பிக்கப் படுகின்றது. ஆகவே யாழ். பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சித்த மருத்துவத் துறை தனிப்பீடமாகவோ அன்றி நிறுவனமாகவோ தனித்துவத்துடன் இயங்கினாலேயே சித்த மருத்துவத்தில் முற்றுமுழுதான வளர்ச்சியை காணக்கூடியதாக இருக்கும்.

தென் இலங்கையில் ஆயுள்வேதம் வளர்ந்தது போல் தமிழீழத்தில் சித்த மருத்துவம் வளரவில்லை என பரவலான கருத்து ஒன்று நிலவுகின்றது. தென் இலங்கையின் ஆயுள்வேத வளர்ச்சிக்குக் காரணம் அங்கு கொழும்புப் பல்கலைக் கழகத்தின் கீழ் நிறுவனமயப் படுத்தப்பட்ட சுதேச மருத்துவ பீடத்தைக் கொண்டதே யாகும். இவ்வாறு சித்த மருத்துவத் துறையும் தனிப் பீடமாகவோ அல்லது நிறுவனமாகவோ யாழ் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கினால்—

★ விஞ்ஞான ரீதியாக மூலிகைகளை ஆராய்ச்சி செய்வதற்கும்,

★ விஞ்ஞான ரீதியாக மருந்துகளை ஆராய்ச்சி செய்வதற்கும்,

★ சமூக மருத்துவ தரவு எடுக்கும் மாணவர் ஆய்வு கூடப் பரிசோதனைகளுக்கும்,

★ பொதுநலவாய, உலா சார புலமைப் பரிசில்களை நேரடியாக எமது துறைக்குப் பெற்றுக்கொள்ளவும்.

★ நடைமுறையில் உள்ள மருந்து தயாரிப்பு முறைகள் ஆய்வு நவீன முறையில் ஆய்வு செய்யப்படுவதற்கும், மேலும் பல நன்மைகள் கிடைப்பதற்கும் வழிவகுக்கும். இன்று சகல துறைகளும் நவீன தொழில் நுட்ப முறையில் முன்னேறி வரும் வேளையில் சித்த மருத்துவம் மட்டும் கற்காலம் நோக்கி பின் செல்ல முடியாது. விஞ்ஞான தொழில் நுட்பத்திற்கு ஏற்றவாறு முன்னேற தனிப் பீடமோ/நிறுவனமோ அமைய வேண்டும் என்பது எமது திடமான கருத்தாகும் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

## இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஆக. 20

அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ள நோயாளி ஒருவருக்கு ''ஓ'' (பிளஸ்) பிரிவு இரத்தம் தேவைப்படுவதாகவும்—

அந்த இரத்தப் பிரிவு உள்ளவர்களை இல 18, வேம்படி வீதியில் உள்ள 'சஞ்சீவி' இரத்ததான சேவைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா

யாழ்ப்பாணம், ஆக. 20

வலி—கிழக்கு தென்பகுதி பலநோக்குச் சங்கத்தின் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாசாலையில் நடைபெறும்.

வலி—கிழக்கு தெ. ப ப. நோ. கூ. சங்கத் தலைவர் திரு. வே சின்னத்தம்பி விழாவுக்குத் தலைமை வகிப்பார். யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் திரு செ. பத்மநாதன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. (இ-110)

## பொருண்மிய கழகத்தின் கண்காட்சி நீடிக்கப்பட்டது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் பொருண்மிய கண்காட்சி மக்கள் பார்வையிடுவதற்கு வசதியாக நாளை சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கைசார்புப் பொருண்மிய நகர்விற்கான முயற்சிகளை விரிவாக எடுத்து விளக்கும் இக்கண்காட்சி மாணவர்கள், கல்விமான்கள், பொருளியலாளர்கள், ஆர்வலர்கள், மற்றும் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறையுடையோருக்கு பெரும் பயன் விளைவிப்பதாக அமைந்துள்ளது.

கட்டணம் எதுவுமின்றி நடத்தப்படும் இக்கண்காட்சியினை இதுவரை பார்வையிடத் தவறியவர்கள், முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதை கருத்திற் கொண்டு இதனை முழுமையாக பார்வையிட்டு பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. (த)

## பாதிக்கப்பட்ட மீனவருக்கு புனர்வாழ்வு உதவித்திட்டம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான புனர் வாழ்வு உதவித் திட்டமாக வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை வழங்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதலில் 907 கடற்றொழிலாளர் குடும்பங்கள் பயனடையவுள்ளன.

வட்டியில்லாத சுழற்சி முறைக் கடனடிப்படையில் வழங்கப்படும், இவ் உதவிகள் ஏனைய பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கும் நாளடைவில் விரிவுபடுத்தப்படவுள்ளன.

பருத்தித்துறை, தெல்லிப்பளை, சாவகச்சேரி, உடுவில், மருதங்கேணி, சண்டிலிப்பாய், நல்லூர், சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் இவ் உதவியினைப் பெற தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (த-144)

## என். சி. ஈ. அனுமதி அட்டை தபாலில்

ஆங்கில தேசிய சான்றிதழ் (என். சி. ஈ.) பரீட்சைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றது.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் நேற்று தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

# இலங்கையில் வாழும் சகல மக்களும் கள்ளத்தோணிகளே

### ஐ. தே. க. எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஆக 20

''நாடற்றவர்கள்'', ''கள்ளத்தோணிகள்'' என இலங்கையில் வாழும் இந்திய மக்களை எதிர்க்கட்சியினர் ஏளனம் செய்கின்றனர். இலங்கையின் 2 ஆயிரத்து ஐநூறு ஆண்டு கால சரித்திரத்தை பின்நோக்கிப் பார்த்தால் இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களுமே நாடற்றவர்களும், கள்ளத்தோணிகளுமாவர்.

— இவ்வாறு நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் குடியுரிமை திருத்த சட்ட மூலத்தின் மீது உரையாற்றிய நுவரெலியா மாவட்ட ஐ. தே. க. எம். பியான முத்து சிவலிங்கம் குறிப்பிட்டார்.

முன்னதாக உரையாற்றிய [illegible] நாணயக்கார —

மலையகத்தில் தமிழர்கள் வாக்குரிமைக்காக முறையற்ற விதத்தில் பதிவு செய்யப்படுவதாகவும்— இதனால் தொண்டமானின் கை ஓங்க அரசு வழிவகுப்பதாகவும்— இந்தியா செல்ல வேண்டியவர்களை அனுப்பாமல் இருப்பது எதிர்வரும் தேர்தல் வெற்றியை உறதிப்படுத்தவே என்றும் கூறினார்.

அதற்குப் பதிலளித்துப் பேசும்போதே முத்துசிவலிங்கம் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

எதிர்க்கட்சியினர் இந்நாட்டில் வாழும் 10 லட்சம் மக்களின் பிரச்சினையை பகடைக் காயாக்கி அரசியல் சதுரங்கமாடி இனத்துவேஷம் பேச முனைகின்றனர். ஆனால் அதனால் அழியப் போவது அவர்களின் அரசியல் வாழ்க்கைதான்.

21ஆம் நூற்றாண்டில் காலடி வைக்கும் நேரத்தில் கூட இனத்துவேஷம் பேசாமல் நாகரீகமாக நடந்து கொள்ள சில எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு தெரியாமல் இருப்பது மனவேதனை அளிக்கிறது என்றார். (த-9)

**கனிய மரங்கள் நட்டிடுவீர்**
**கனிவுடனே காத்திடுவீர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அமரர் யேம்ஸ் ஞானப்பிரகாசம் (மரியதாஸ்)

மருதடி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திரு. யேம்ஸ் ஞானப்பிரகாசம் (மரியதாஸ்), 16-08-93இல் கனடாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்தியர் யேம்ஸ், திருமதி மரியம்மா ஆகியோரின் அன்புப் புதல்வனும், சில்லாலையைச் சேர்ந்த நல்லபிள்ளை புஸ்பம் என்பவரின் அன்புக் கணவரும், ஜெயந்தன் (மருத்துவ பீட மாணவன் பல்கலைக்கழகம், கனடா), ஜெயந்தினி, சுரேந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும், A. J. அருட்பிரகாசம் (ஒய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் விவசாய ஆராய்ச்சி நிலையம் கிளிநொச்சி), வரப்பிரகாசம் டேவிட் (Italy), திருமதி பிளசம் ஆதர், திருமதி சறோஜா றெஜினோல்ட் (கனடா), நேசா நற்கருணைப்பிரகாசம் (பெற்றோலியக் கூட்டுத்தாபனம் யாழ்ப்பாணம்), Dr. யேம்ஸ் பிரான்சிஸ் பிரகாசம் (விமலன், கனடா), பிரகாசராஜா (சேவியர் கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி J. M. T. அருட்பிரகாசம் ஒய்வு பெற்ற ஆசிரியர் யாழ். கன்னியர்மட மகா வித்தியாலயம்) திருமதி நீற்றா வரப்பிரகாசம் (கனடா), திரு. ஆதர், திரு. றெஜினோல்ட் (கனடா), திருமதி சுகந்தா நற்கருணைப்பிரகாசம், திருமதி விஜி (கனடா), திருமதி ஜோய் சேவியர் பிரகாசராஜா (கனடா), யோண் பிள்ளை, செல்லமணி, அக்னெஸ் நவரெட்ணம், அருட்கலாநிதி S. J இம்மானுவல் (அதிபர் யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரி), திரு. S. F. சேவியர், திருமதிகள் M. A. தம்பிரெட்ணம், C இந்திராணி, S. பொன்ராணி, S. றெஜினா, T. கேசலா, S. நிற்செலா, A. மரிஸெலா, A. வனஜா திரு. கணாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி இராசையா லூர்த்துமேரியின் பேறாமகனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை கனடாவில் நடைபெற்றது. இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. ஜே. அருட்பிரகாசம்
(சகோதரர்)

2/2, மருதடி வீதி,
யாழ்ப்பாணம். (27002)

## சிதம்பரப்பிள்ளை கந்தசாமி

நெல்லியடி - ராணி மில், முள்ளியவளை - செல்லம் மில் உரிமையாளர் சிதம்பரப்பிள்ளை கந்தசாமி 17-08-93இல் முள்ளியவளையில் உள்ள அன்னாரது இல்லத்தில் காலமானார். ஈமக்கிரியைகள் 18-08-93 அன்று முள்ளியவளையில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
க. கிருஷ்ணகுமார்.
(சூரியா - பேறாமகன்)

நெல்லியடி. (27903)

## இரத்தினம் தில்லைநடேசன்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் சரவணையில் வசித்தவரும் தற்பொழுது நாவாந்துறையில் வசித்தவருமாகிய இரத்தினம் தம்பதிகளின் மகன் தில்லைநடேசன் 19 - 8 - 93 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற மூத்ததம்பி, திருமதி மூத்ததம்பி ஆகியோரின் மருமகனும், தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், காண்டீபன், மயூரன், காயத்திரி, அரவிந்தன், ஆதித்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், தனலஷ்மி, பாக்கியம், காலஞ்சென்ற கணேசன் ஆகியோரின் சகோதரரும், தனபாலசிங்கம், இராசேந்திரம், சுசிலா, இந்திராணி இராசப்பா, துரைராசா செல்வராணி, சோமசுந்தரம் இராசு, மார்க்கண்டு ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதக் கிரியை இன்று 20 - 8 - 93 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு 62/5, 1 ஆம் ஒழுங்கை பிரவுண் வீதி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தங்கேஸ்வரி
(மனைவி)

62/5, முதலாம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, கந்தர்மடம். (27005)

# சமாதானம் ஏற்படுத்துவதில் அரசு உறுதியாக இருக்கிறது

## பிரதமர் நேற்று சபையில் உரை

வடக்கு — கிழக்கு பகுதிகளில் மீண்டும் சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்றத்தில் நேற்று முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவசர காலச்சட்ட நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசுகையில் அவர் இப்படித் தெரிவித்தார்.

தீவிரவாதிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. படையினர் மீண்டும் கைப்பற்றிய இடங்களில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் அவர் சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான அரசின் நடவடிக்கை தீவிரவாதத்தில் இருந்து பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கேயாகும். ஜனநாயக உரிமைகளை வடக்கு—கிழக்கு மக்களும் அனுபவிக்க வழி செய்வதே அரசின் நோக்கமாகும் என்றும் பிரதமர் சொன்னார்.

அரசின் குறுகிய கொள்கை காரணமாகவே வடக்கு — கிழக்கு யுத்தம் இன்று மிக அபாயகரமான நிலைக்கு வந்துள்ளது என சுதந்திரக் கட்சி எம். பி. றிச்சட் பதிரான கூறினார்.

## 'குமண'வில் செல்வோர் கவனத்துக்கு

'குமண' கப்பலில் திருகோணமலை செல்வதற்காக யாழ். அரச அதிபரிடம் பதிவு செய்தவர்களை—

நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கும், நண்பகல் 12.30 மணிக்கும் இடையில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அலுவலகத்தில் சமுகமளித்து தமது பயணத்தை உறுதி செய்து கொள்ளுமாறு செயலகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பல் 24 ஆம் திகதி புறப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டபோதிலும் பொருள்கள் இறக்கி முடியாவிட்டால் 25 ஆம் திகதியே புறப்படும் என நேற்று மாலை கூறப்பட்டது. (ஒ-3)

## பேச்சுக்கான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வுக்கானவிருப்பமும்செயற்பாடும் முதலில் அரச பக்கத்திலேயே நிகழ வேண்டும் என்று அவர்கள் உணர்கிறார்கள்.

விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் நேரடியாகப் பேசுவதையே விரும்புகிறார்கள். அதற்கான பொருத்தமான பின்னணியை அரசே ஒழுங்கு செய்தல் வேண்டும்.

சமாதானத்தைக் கொண்டு வரும் நோக்குடன் பல சமய, சர்வதேச தூதுக்குழுக்கள் பல தடவைகள் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தின. ஆனால் இனப்பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய எவ்வித பயன் தரக் கூடிய விளைவும் ஏற்படவில்லை.

ஆகையால் அரசும் விடுதலைப் புலிகளும் நேரடியாகப் பேசினால் மட்டுமே சமாதானத்தை உருவாக்கலாம். இருசாராரும் ஒருவர் பற்றி மற்றவர் வளர்த்துள்ள நம்பிக்கையீனங்களை அகற்றுதல் வேண்டும் என்று தெரிவித்தார். (அ-6)

## நீதியாளர்களும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் திரு. பரா, காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன், யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு இளம்பரிதி, நிதர்சனம் பொறுப்பாளர் திரு ஜவான் ஆகியோர் உட்பட விடுதலைப் புலிகள் இயக்க முக்கிய உறுப்பினர்கள் [illegible] (ஒ-6)

## தமிழீழ நீதித்துறைக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இறைமையுடைய நாட்டின் அரச நிர்வாக அலகு போல எமது நீதித்துறை உருவாக்கப்படுகிறது போராட்டத்தின் பாரிய வளர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.

நீங்கள் போராளிகளாக இருந்து நீதியாளர்களாக மாறியிருக்கிறீர்கள். எந்த இலட்சியப் பற்றுடன் இயக்கத்தில் இணைந்து செயற்பட்டீர்களோ அதே போன்ற தியாக உணர்வுடன், பொறுப்புணர்வுடன், பயம் கலந்த எச்சரிக்கை உணர்வுடன் நீங்கள் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். கற்றது கை மண் அளவு, கற்காதது உலகளவு என்பார்கள், இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக் கொள்ள முயல வேண்டும். அனுபவம் மூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவைப் பெற்றுக் கொள்ளலாம்.

### மக்களின் எதிர்பார்ப்பு

போராளிகள் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்றால் தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி சரியான முறையில் நீதி வழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்க தயாராகவுள்ள இலட்சிய வாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.

எனவே போராளிகளாய நீங்கள் நீதி நிர்வாகத்தை பொறுப்பேற்கும் பொழுது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயலாற்று வீர்கள் என நம்புகிறேன்.

தனிப்பட்ட உணர்வுகளுக்கும், பந்தபாச உறவுகளுக்கும் இடமளியாது, நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

இலட்சியப் போராளிகளாகிய உங்களிடமிருந்து தமக்கு நீதியும் நியாயமும் கிடைக்குமென மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். எமது மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் கண்ணியத்துடனும் செயற்பட்டு, சமூக நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

மக்களின் நானாந்த பிரச்சினைகள், மனித உறவுப் பிரச்சினைகள், முரண்பாடுகள் ஆகியன உங்களுக்கு சிறிய பிரச்சினைகள் போன்று அர்த்தமற்றதாகத் தெரியும். ஆனால் மக்களுக்கு அவர்களது பிரச்சினைகள் பூதாகரமாகத் தென்படும்.

ஆகவே மக்களின் உணர்வுகளைப் புரிந்து, அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து, அவர்களுக்கு நீதிவழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். சில சமயங்களில் விமர்சனங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் ஆளாக வேண்டியும் ஏற்படலாம்.

ஆனால் எப்பொழுதும் நேர்மை தவறாது சத்தியத்தின் வழியில் நீங்கள் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். அதற்கான உறுதியும் துணிவும் உங்களிடம் இருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

## ஸ்கொட் அறிக்கைக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேப அறிக்கை அரசுக்கும், பொதுமக்களுக்கும் சமர்ப்பிக்கப் படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

அறிக்கையின் பிரதி ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸாருக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

லலித் கொலையில் விடுதலைப் புலிகளின் முத்திரை காணப்படுகிறது என்றும், இந்தக் கொலையில் புலிகளின் தொடர்பு இருக்கலாம் என்றும் ஸ்கொட் நிபுணர் குழு அறிக்கை சமர்ப்பித்திருந்தது என்பதும்—

ஆனால்—

லலித் குடும்பத்தினர் பிரஸ்தாப கொலையை அரசே செய்தது என்று தொடர்ந்து கூறிவருகின்றனர் என்பதும் தெரிந்தவையே. (ஒ-6)

## பொறி வெடியில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொலன்றுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

கல்குடாவில் தரவிக்குளம் என்னுமிடத்தில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டதாக 'புலிகளின் குரல்' வானொலிச் செய்தி தெரிவித்தது. (ஒ-5)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org